**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No :80/2023** நாள் 19.08.2025.

வாசா.1, திரு.K.மாரிமுத்து

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்துகொள்வதற்கு வழக்கறிஞரிடம் நான் தான் விபரம் சொன்னேன். நான் செட்டியார்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். எதிர்வாதியானவர் வடக்கு தேவதானம் ஊரில் வசிக்கிறார். என் ஊருக்கும் எதிர்வாதி ஊருக்கும் இடையில் சுமார் 7 கி.மீ துாரம் இருக்கும். நானும் எதிர்வாதியும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள். நான் நூல் கடையை வைத்துள்ளேன். எதிர்வாதியானவர் டெய்லராக உள்ளார். நான் நூல்கண்டு வியாபரத்தை மொத்தமாக வைத்து வியாபாரம் செய்கிறேன். தன்னுடைய வியாபாரம் சம்மந்தமாக சில சமயங்களில் வெளி மாநிலத்திற்கும் சென்று வருவேன். எதிர்வாதியானவரை எனக்கு 10 ஆண்டுகாளமாக தொழில் ரீதியாக பழக்கம். எதிர்வாதியானவர் எனக்கு தொழில் ரீதியாக 10 ஆண்டுகாளமாக பழக்கம் என்று என்னுடைய வழக்குரையிலும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிர்வாதிக்கும் இடையில் இதற்கு முன்பு பணம் கொடுக்கல் வாங்கல் பழக்கம் இல்லை. 04.09.2013ம் தேதியில் நான் எதிர்வாதியானவருக்கு ரூ.13 லட்சம் கொடுத்து பிராது சொத்தை பொறுத்து பதிவு பெற்ற அடமான கடன்பத்திரத்தை அவர் எனக்கு எழுதிக்கொடுத்தார். நான் ரூ.13 லட்சத்தை 04.09.2013ம் தேதியிலேயே ரொக்கமாக மொத்தமாக ஒரே தேதியில் தான் கொடுத்தேன். நான் ரூ.13 லட்சத்தை என் கையில் ரொக்கமாக இடம் வாங்குவதற்காக வைத்திருந்தேன் எதிர்வாதியானவர் பணம் கேட்டார் நான் கொடுத்தேன். அவர் தொழில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காக வேண்டி என்னிடமிருந்து பணம் கேட்டார். நான் வருமான வரி செலுத்தும் நபரல்ல. நான் இன்றைய தேதி வரையிலும் வருமான வரி செலுத்தியதில்லை. அடமானம் ஆனது 2 ஆண்டு காலம் கெடுவாகும். அது 2015ம் ஆண்டிற்குள் முடிவடைகிறது. நான் எதிர்வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை வா.சா.ஆ.2 ஆனதை 7 ஆண்டு காலம் கழித்து தான் அனுப்பினேன் என்றால் சரிதான். நான் எதிர்வாதியானவரை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிக்கொள்வதற்கு முன்பாக அசலையும் வட்டியையும் செலுத்த வேண்டி 10 முறை நேரில் சென்று கேட்டும் அவர் கொடுக்க மறுத்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார். நான் வேறு யாரையும் வைத்து அசலையும் வட்டியையும் எதிர்வாதியிடம் கேட்கவில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்னுடைய வகையாட்கள் மூலமாக எதிர்வாதியிடம் அசலையும் வட்டியயையும் கேட்டு அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வாதியானவர் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கிக்கொண்டார். வா.சா.ஆ.3 ஆவணப்படி நான் வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக அனுப்பிய அறிவிப்பை பெற்றுக்கொண்டாரா இல்லை யா என்று அதில் குறிப்பிட்டு சொல்லிப்படவில்லை என்றால் அவருக்கு நான் அனுப்பிய அறிவிப்பானதை 07.10.2022ம் தேதியிலேயே தகவல் தெரிவிக்கப்பட்டதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். நான் வட்டிக்காக தொழில் செய்துவரவில்லை. அடமான தொகைக்கு வட்டியாக 2 % என்று எதிர்வாதி தான் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தார். வட்டி தொகையை செலுத்த

தவறினால் 2.25 சதவீதம் வட்டியாக செலுத்த வேண்டும்என்று நான் கோரியுள்ளேன் என்றால் அவர் ஆரம்பம் முதல் கொண்டே வட்டி தொகை எதுவும் செலுத்தவில்லை. எதிர்வாதியும் எனக்கும் தொழில் ரீதியாக பழக்கம் என்றும் அந்த வகையில் நான் எதிர்வாதிக்கு சிறுக சிறுக பணம் கொடுத்தேன் என்றும் மொத்தமாக ரூ.13 லட்சத்தை கொடுக்கவில்லை என்றும் ஆனால் அடமான பத்திரத்தை எதிர்வாதியானவர் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் மொத்தமாக ரூ.13 லட்சம்பெற்றுக்கொண்டு தான் அடமானம் எழுதிக்கொடுத்தார். மொத்தமாக நான் ரூ.13 லட்சத்தை கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எதிர்வாதியும் தொழில் ரீதியாக பழக்கம் என்பதால் அவர் என்னை வாரந்தோறும் வந்து பார்த்து செல்வார் என்றும் அப்போது வட்டி தொகையையும் அவர் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் எதிர்வாதியும் சுமார் 7 கி.மீ துூரத்திற்குள் வசித்து வருவதாலும் அவர் மாதந்தோறும் வந்து எனக்கு வட்டித்தொகையை செலுத்தியுள்ளதாலும் அதனால் தான் நான் சுமார் 7 ஆண்டு கழித்து வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியிருந்தேன் என்றால் அப்படியில்லை. வழக்கை தாக்கல் செய்துகொள்வதற்கு முன்பாக எனக்கும் எதிர்வாதிக்கும் இடையில் அடமான கடன் சம்மந்தமாக ஒரு முறை பேச்சுவார்த்தை நடந்தது. அப்பொழுது அவர் வட்டி தொகை முழுவதுமாக கொடுத்துவிட்டதாகவும் அசல் தொகை ரூ.13 லட்சத்தை தருவதாக சொன்னார் என்று சொன்னால் அவர் அசலையும் வட்டியையும் தரவில்லை நான் அசலையும் வட்டியையும் தரவேண்டும் என்று தான் கேட்டேன். எதிர்வாதியானவர் எனக்கு மாதந்தோறும் வட்டி தொகையை செலுத்தி வந்தார் என்றும் நான் அசல் தொகை ரூ.13 லட்சத்திற்கு அவர் வட்டி செலுத்த வேண்டும் என்று சொல்லி வட்டி தொகை மட்டுமே ரூ.29 லட்சத்தை கேட்டு வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்வாதியானவர் எனக்கு வட்டி தொகை முழுவதும் கொடுத்துவிட்டார் என்றும் அசல் தொகை ரூ.13 லட்சமே பாக்கி என்றும் அதனை எதிர்வாதியானாவர் நீதிமன்றம் மூலமாகவோ அல்லது நேரிலோ கொடுக்க தயாராக உள்ளார் என்று சொன்னால் அப்படியில்லை. நான் வெளிமாநிலங்களுக்கு சென்றிருந்த போது எதிர்வாதியிடம் வட்டி தொகையை உடனடியாக தரவேண்டும் என்று கேட்டு எதிர்வாதியானவர் அவர் வங்கி கணக்கு மூலமாக எனக்கு வட்டி தொகையை அனுப்பியுள்ளார் என்றும் அந்த ஸ்டேட்மெண்டை பார்த்தால் தெரியவரும் என்றால் நூல்கண்டை மொத்தமாக அவர் கொள்முதல் செய்த வகையில் தான் வங்கி மூலமாக பணத்தை அனுப்பியுள்ளார். 2021-2022 என்ற வாக்கில் அவர் எனக்கு கொள்முதல் செய்த வகையில் தான் பணத்தை அனுப்பியுள்ளார் அதன் பின்பு அனுப்பவில்லை. எதிர்வா்தியானவர் எனக்கு ரூ.13 லட்சம் தொகைக்கு அடமானம் வைத்து வட்டி தொகையையும் செலுத்தாமல் உள்ள போது நான் மீண்டும் அவரிடம் கொள்முதல் செய்த வகையில் எப்படி பணப்பரிவர்த்தணை செய்துகொண்டேன் என்று கேட்டால் எதிர்வாதியின் மகனானவர் காவியா கார்மென்ட்ஸ் என்ற கடையை வைத்துள்ளார் அதன்மூலமாக தான் அவர் காசோலை கொடுத்து பொருள்வாங்கியுள்ளார். எதிர்வாதியானவர் என்னிடமிருந்து அடமானம் கடன் ரூ.13 லட்சம் பெற்றிருப்பதாகவும்அதற்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை என்று சொல்லி நான் எதிர்வாதியின் மகனிடம் சொல்லி கேட்டேனா என்று கேட்டால் அவரிடம் சொல்லவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எதிர்வாதியானவர் குடும்ப கடன்களை தீர்ப்பதற்காகவும் சில்லரை கடன்களை அடைப்பதற்காக என்று சொல்லி தான் கண்டுள்ளது என்று சொன்னால் ஆவணத்தில்

அவ்வாறு தான் உள்ளது ஆனால் அவர் தன்னுடைய வியாபார விருத்திக்காக வேண்டி தான் சொல்லி அடமான கடன் பெற்றிருந்தார். உண்மையில் எதிர்வாதியானவர் என்னிடமிருந்து அடமான கடனை வியாபார விருத்திக்காக வாங்கியருந்தால் அதை பற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லிருப்பார் என்றும் எதிர்வாததியானவர் என்னிடமிருந்து சிறுக சிறுக பணத்தை பெற்று இருந்த காரணத்தால் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அது குறித்து சொல்லப்படவில்லை என்றால் அப்படியில்லை. நா'ன் வா.சா.ஆ.1 ஆவணப்படிக்கு முழுத்தொகை ரூ.13 லட்சத்தை 04.09.2013 ம் தேதியில் கொடுத்தேனா என்பதை அப்போது இருந்த சாட்சிகள் மூலமாக விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகளாக மாசிலாமணியும், குருசாமியும் கையொப்பம் செய்துள்ளார்கள். சாட்சிகள் இருவரும் எதிர்வாதியின் ஊரை சார்ந்தவர்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி மாசிலாமணி தெற்கு தேவதானம் ஊர் என்றும் சாட்சி குருசாமி வடக்கு தேவதானம் ஊர் என்று சொல்லியுள்ளது என்றால் பொதுவாக தேவதானம் என்று தான் சொல்வார்கள். வடக்கு தெற்கு பற்றி எனக்கு தெரியாது. எதிர்வாதியானவர் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது. இதுநாள் வரையிலும் நான் வழக்கறிஞர் மூலமாக கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. எதிர்வாதியானவர் வட்டி தொகையை செலுத்திவிட்டார் என்றும் அசல் தொகை ரூ.13 லட்சமே பாக்கி உள்ளது என்றும் நான் அதிக வட்டி கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 0.75 % அல்லது 1 % தான் வட்டி தொகையாக வங்குவது உண்டு என்றும் 2 % வட்டி என்பது கந்துவட்டி தடை சட்டப்படி உள்ளது என்றும் சொன்னால் எதிர்வாதியானவர் ஒப்புக்கொண்ட படி 2 % வட்டியையும் அவர் செலுத்தவில்லை நான் கந்துவட்டிக்கு விடவில்லை. பிராதில் கோரிய தொகையாதை எதிர்வாதியானவர் எனக்கு செலுத்தவேண்டி அவசியமில்லை என்றும் அசல் தொகை ரூ.13 லட்சம் மட்டுமே எதிர்வாதியானவர் எனக்கு செலுத்தவேண்டியது என்றும் நான் அதிக வட்டி தொகையுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த வழக்கானதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் கேரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 19th day of August 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.